JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 31/2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW2 | Prosecution /Defence / Court | |
| Name | Kannan | Caste | |
| Father's Name | Raju | Calling | |
| Village | Bhavani Main Road | Religion | |
| Taluk | Perundurai | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of
Date: 21.09.2021

முதல் விசாரணை

நான் மேற்படி விலாசத்தில் குடும்பத்துடன் குடியிருந்து கொண்டு சுயதொழில் செய்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் ஈரோடில் உள்ள Samsung Mobile Store -ல் மேலாளராக பணியாற்றிவந்தேன். அசா.1 என்னுடைய அம்மா. கடந்த 20.11.2014 ஆம் தேதியில் நான் அலுவலகப்பணியாக சேலம் சென்றிருந்தேன். அப்போது சுமார் 4.00 மணியளவில் என் அம்மா எனக்கு பதற்றத்துடன் போன் செய்து தன்னை வீட்டில் யாரோ சில நபர்கள் வந்து கட்டிப்போட்டு வீட்டில் உள்ள பொருட்களை கலைத்து விட்டு பொருட்களை எடுத்துக்கொண்டு தன்னை அறையில்வைத்து பூட்டிசென்றுவிட்டதாகவும் பின்னர் தான் சத்தம்போட்டு அருகில் இருந்தவர்கள் வந்து கதவு பூட்டியிருந்ததால் பூட்டை உடைத்து தன்னை வெளியே அழைத்து வந்து காப்பாற்றியதாக கூறினார். நான் அப்பொழுது வெளியூரில் இருந்ததால் வீட்டிற்கு வந்து சேர இரவு 8.00 மணி ஆகிவிட்டது. நான் சென்று எனது அம்மாவை பார்த்தபோது தனக்கு எதுவும் அடிபடவில்லை என்று கூறினார். வீட்டிற்குள் சென்று பார்த்தபோது பொருட்கள் சிதறி கிடந்தது. எனது அம்மாவிடம் கேட்டபோது யாரோ பெல் அடித்தார்கள் என்றும் வெளியே வந்து பார்த்தபோது 3 நபர்கள் இருந்தார்கள்

என்றும் அதில் ஒரு நபர் பார்சல் வைத்திருந்தார் என்றும் அவர்கள் என் பெயரை சொல்லி கேட்டபோது தான் இல்லை என்று கூறியதாவும் பின்னர் தான் கையெழுத்து போட்டு வாங்கிக்கொண்டு உள்ளே சென்றபோது பார்சல் கொண்டுவந்த ஒரு நபர் பின்னாலேயே வந்துள்ளார். எதற்காக வந்தீர் என்று கேட்டதற்கு தண்ணீர் வேண்டும் என்று கேட்டுள்ளார். என் அம்மா பார்சலை வைத்துவிட்டு வீட்டிற்குள் சென்று தண்ணீர் கொண்டுவருவதற்குள் அந்த நபரும் பின்னாலேயே வந்து மற்ற 2 நபர்களும் வந்து என் அம்மாவை பெட்ரூமிற்குள் தள்ளி ஒரு நபர் கத்தியை வைத்து என் அம்மாவை மிரட்டியுள்ளார். ஒருவர் என் அம்மா உடனேயே நின்றுவிட்டதாகவும் மற்ற நபர்கள் வீட்டை சோதனையிட்டதாகவும் பின்னர் என் அம்மாவிடம் ஒரு நபர் கையில் இருந்த மோதிரத்தை கழற்றிகொடுக்கசொன்னதாகவும் என் அம்மா பயந்து கழற்றி கொடுத்ததாகவும் அதன் பின்னர் அனைவரும் சேர்ந்து என் அம்மாவை அறைக்குள் வைத்து பெட்ஷீட்டால் கட்டிப்போட்டுவிட்டு கதவை பூட்டிவிட்டு கிளம்பிவிட்டதாகவும் பின்னர் தானே முயற்சி செய்து கட்டை அவிழ்த்து ஜன்னல் வழியே காப்பாற்றுங்கள் என்று சத்தமிட்டதாகவும் அப்பொழுது பின்னால் மற்றும் முன்னால் இருந்த கடைக்காரர்கள் வந்து கதவை திறக்க முற்பட்ட போது கதவை திறக்க முடியாமல் சாவி உள்ளதா என்று கேட்டனர் என்றும் சாவி இல்லை என்பதால் கதவின் பூட்டை உடைத்து என் அம்மாவை வெளியேற்றியதாகவும் என்னிடம் கூறினார். பின்னர் நான் உள்ளே சென்றுபார்த்தபோது என் அம்மாவின் தோடு - 1 செட் மற்றும் கையில் போட்டிருந்த மோதிரம் காணாமல் போயிருந்தது. பின்னர் புகாரை என் அம்மா நடந்ததை சொல்ல சொல்ல நான் உடனிருந்து என் நண்பர் ஐயப்பன் என்பவர் புகார் எழுதினார். பின்னர் இரவு 9.00 மணியளவில் காவல்நிலையம் சென்று நானும் அம்மாவும் புகார் கொடுத்தோம். பின்னர் போலீசார் வந்து விசாரித்தார்கள். சுமார் ஒருமாதம் கழித்து என் அம்மாவிற்கு போன் செய்து வந்து அடையாளம் காட்டுமாறு கூறினார்கள். நானும் அம்மாவும் சென்றோம், அங்கு ஒரு நபரை போலீசார் காட்டி அவரை தெரியுமா என்று கேட்டபோது என் அம்மா அடையாளம் காட்டினார்.

பின்னர் திருடு போன பொருட்களை என் அம்மா அடையாளம் காட்டினார். பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து நகைகளை பெற்றுக்கொண்டோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**.,

புகாரை எழுதிய எனது நண்பர் ஐயப்பன் பெருந்துறையில் வேலை செய்துவருகிறார். எனக்கு எழுதப்படிக்கத்தெரியும். நான் MCA வரை படித்துள்ளேன். ஏன் நான் புகாரை எழுதவில்லை என்றால் பதற்றமாக இருந்ததால் நான் எழுதவில்லை. எனது நண்பர் தான் எழுதினார். மேற்சொன்ன விவரத்தை போலீசார் விசாரணையின்போது கூறினேனா என்றால் இல்லை. புகாரை எழுதியவுடன் நானோ ஐயப்பனோ புகாரில் கையெழுத்திட்டோமா என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் கதவை உடைத்து என் அம்மாவை வெளியேற்றியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். உடைத்த பூட்டை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கவனிக்கவில்லை. கதவில் கைரேகைகளை போலீசார் எடுத்துக்கொண்டனர். மற்ற இடங்களில் கைரேகை எடுத்துச்சென்றனர். போலீசார் வந்து பார்க்கும்வரை பொருட்கள் எல்லாம் அவ்வாறே இருந்தது. எங்கள் வீட்டில் 2 பீரோ ஒரு Dressing table உள்ளது. எல்லா இடங்களிலும் போலீசார் கைரேகை எடுத்தார்கள் என்றால் சரிதான். Dressing table -ல் வைத்திருந்த ஒரு ஜோடி கம்மலை திருடர்கள் எடுத்துச்சென்றுவிட்டனர். சம்பவ இடத்தை போலீசார் புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். போலீசார் எனது அம்மாவை அடையாளம் காட்ட அழைத்தபோது சுமார் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 5 முதல் 10 நபர்கள் இருந்தனர். என் அம்மாவிடம் போலீசார் ஒரு நபரை சுட்டிக்காட்டி அந்த நபரைஅடையாளம் தெரிகிறதா என்று போலீசார் கேட்டார்கள் என்றால் சரிதான். நான் எனது அம்மாவுடன் அடையாளம் காட்ட சென்றதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை சான்றுப்பொருட்களை கைப்பற்றிய பிறகு

என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. எனது தாயார் எந்த கையில் மோதிரம் அணிந்திருந்தார் என்றால் இடது கையில் அணிந்திருந்தார் எந்த விரல் என்று தெரியாது. அந்த மோதிரத்திற்கு தனிப்பட்ட அடையாளம் கிடையாது என்றால் சரியல்ல. அதில் இனிசியல் போடப்பட்டிருந்தது. அதில் PS -அல்லது - KS என எழுதப்பட்டிருக்கும் . கைப்பற்றபட்ட சொத்துக்களுக்கும் புகாரில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, 4சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

Signature of the Witness

Name of the Interpreter
Tmt.K.S.Shabeena, B.A.B.L.
Judicial Magistrate,
Perundurai.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the-----day of --------------2021.

Signature of Interpreter